**தேதி:- 05.03.2020 அசல் வழக்கு எண்.101/2017 பி.சா.1 (ரவி)**

**குறுக்கு விசாரணை:- (1 முதல் 3 பிரதிவாதிகள் தரப்பில்)**

வழக்குரை மற்றும் பிரதிவாதிகளின் எதிர்வழக்குரை ஆகியவற்றைப் படித்துப் பார்த்தேன். என் பாட்டனாருக்கு சங்கிலி, ஜெயராமன், கோவிந்தராஜ், சுந்தர்ராஜ் ஆகியோர் வாரிசுகள். மேற்படி சுந்தர்ராஜூக்கு வேணுகோபால், சுப்பராயலு, அழகர், காளிராஜ், சங்கிலி, சரோஜா ஆகியோர்களும் வாரிசுகள்தான். இந்த வழக்கில் மேற்படி ஆறுநபர்களையும் சேர்க்காமல் சுந்தர்ராஜின் மற்ற வாரிசுகள் மீது மட்டும் தாவா தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். சங்கிலியைத் தவிர மற்ற ஐந்து நபர்களும் இறந்துவிட்டார்கள். மேற்படி சங்கிலி காணாமல் போய் பத்து ஆண்டுகள் இருக்கும். மற்ற ஐந்து நபர்களுக்கும் திருமணமாகி வாரிசுகள் இருக்கிறார்கள். அந்த வாரிசுகளை தரப்பினர்களாக சேர்க்கவில்லை. ஐந்து நபர்களின் வாரிசுகள் மொத்தமாக சுமார் 20 பேர் இருப்பார்கள் என்றால் சரிதான். என்னைப் பொறுத்த வரையில் பி.சா.ஆ.1 உயில் என்பதை ஒப்புக் கொள்கிறேன். மேற்படி சங்கிலிக்கு திருமணமாகவில்லை என்று வழக்குரையில் சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. மேற்படி சங்கிலிக்கு திருமணமாகி குழந்தைகள் இல்லாமல் மனைவியும் இறந்துவிட்டதால் அவருக்கு வாரிசுகள் இல்லை என்ற வழக்குரையில் சொல்லியுள்ளேன். பி.சா.ஆ.1 உயிலில் உள்ள சங்கதிகள் உண்மையானவை. பி.சா.ஆ.1ல் உயிலை எழுதும் போது மேற்படி சங்கிலிக்கு பத்து வயது குழந்தை இருப்பதாக கண்டுள்ளது என்றால் சரிதான். அந்த குழந்தை தற்போதும் இருக்றிார் என்றால் எனக்குத் தெரியாது. சங்கிலியின் வாரிசுகளையும், சுந்தர்ராஜின் மற்ற வாரிசுகளையும தரப்பினார்களாக சேர்க்காததால் வழக்கு பாதிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. அவர்களை வழக்கில் இருந்து மறைத்திருப்பதும் மோசடியானது என்றால் சரியல்ல. வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பே பி.சா.ஆ.1 இருப்பது எனக்குத் தெரியும். ஆனால் வழக்கை உயிலின் அடிப்படையில தாக்கல் செய்யவில்லை என்றால் அசல் உயில் என்னிடமில்லை என்பதால் அதனடிப்படையில் தாக்கல் செய்யவில்லை. அப்படியானால் என்னிடம் நகல் இருந்ததா என்றால் நகலும் இல்லை. மாவட்ட வருவாய் அலுவலரிடம் நானும், 4ஆம் பிரதிவாதியும் மனுக் கொடுத்தோம். 1 முதல் 3 பிரதிவாதிகளின் எதிர்வழக்குரையில் சிறுதூர் கிராமத்தில் புலஎண்.244/2 ல் 2.36 ஏக்கர் நிலம் இருந்ததாக குறிப்பிட்டுள்ளார்கள் என்றால சரிதான். அந்த

நிலமும் கிருஷ்ணசாமிநாயுடு விட்டுவிட்டுச் சென்ற நிலம் என்றால் சரிதான். அந்த எதிர்வழக்குரையில் சொல்லியுள்ள விபரங்கள் எனக்குத் தெரியும். அதில் 24.08.1962 ல் ஒரு ஒத்தியும், 10.10.1962 ல் ஒரு ஒத்தியும் பதிவு செய்யப்பட்டுள்ளதாக கண்டுள்ளது என்றால் சரிதான். சுந்தர்ராஜ், கோவிந்தராஜ், ஜெயராம் ஆகிய மூவரும் அந்த ஒத்தியை ஏற்படுத்தினார்கள்.

**<u>நீதிமன்றக் கேள்விக்கான பதில்</u>**

தாவாச் சொத்தின் மொத்த விஸ்தீரணம் 1.07 ஏக்கர். தாவாச் சொத்திற்கான பட்டா 7 ஆம்பிரதிவாதியின் கணவர் பெயரிலுள்ளது. அந்தச் சொத்தை 1 ஆம் பிரதிவாதி 7 ஆம் பிரதிவாதியின் கணவரான சந்திரனுக்கு 2008 ல் விற்றதாக தெரிகிறது. அதனால் பட்டா 2008 ல் இருந்து சந்திரன் பெயரில் இருக்கிறது. அவ்வாறு பட்டா சந்திரன் பெயரில மாற்றப்பட்ட விபரம் 2008 ல் இருந்து சுமார் ஒன்னரை வருடம் அல்லது இரண்டு வருடம் கழித்து எனக்குத் தெரியவந்தது. நான் உடனே வழக்கு தாக்கல் செய்யவில்லை. அறிவிப்பு கொடுத்தேன். உடனே ஏன் வழக்கு தாக்கல் செய்யவில்லை என்றால் பேச்சுவார்த்தை நடந்ததால் வழக்கு தாக்கல் செய்யவில்லை. 1 ஆம் பிரதிவாதி 2008 ல் விற்றதாகவும் சந்திரன் பெயரில் பட்டா மாற்றப்பட்டதாகவும் வழக்குரையில் சொல்லியுள்ளேன். தாவாச் சொத்து தவிர 2008 ல் எங்களுக்குள் பிரிக்கப்பட்டாத நிலம் எதுவும் இல்லை வீடுகளையும் காலிமனைகளையும் மட்டும் பிரித்துக் கொண்டோம். பிற்பாடு பிரித்துக் கொள்ளலாம் என்று தாவாச் சொத்தை பிரித்துக் கொள்ளாமல் விட்டுவிட்டோம். 1978 க்கு முன்பாகவே வீடுகளையும் காலிமனைகளையும் பிரித்துக் கொண்டோம். அவ்வாறு பிரித்துக் கொண்ட வீடுகளையும் மனைகளையும் விற்றுவிடடோம் வாங்கியவர்கள் பெயரில் பட்டா மாற்றம் செய்யப்பட்டது. 1961 முதல் 1987 வரையில் அதாவது நிலஉடைமை மேம்பாட்டுத் திட்டம் வரையில் பட்டா சுந்தர்ராஜ், கோவிந்தராஜ், ஜெயராம் ஆகியோர் பெயரில்தான் இருந்தது.

**<u>சாட்சி மீண்டும் குறுக்குவிசாரணை செய்யப்படுகிறார்.</u>**

வா.சா-ஆ.11 சட்டஅறிவிப்பை 27.02.2006 ல் அனுப்பினோம் என்றால் சரிதான். அந்த அறிவிப்பை நான் அனுப்பினேனா என்றால் நான் அனுப்பவில்லை கையொப்பமும் இடவில்லை சென்னையில் இருந்து என் பெரியப்பா மகன் அழகர் அனுப்பினார். ஆனால் அந்த அறிவிப்பில் எனக்காகவும்

சேர்ந்து அனுப்பப்பட்டதாக கண்டுள்ளது. அந்த அறிவிப்பில் கண்டுள்ள சங்கதிகள் சரியானவைதான். அந்த அறிவிப்பை அனுப்பியது அப்போதே எனக்குத் தெரியும். 16.03.2006 ல் வா.சா.ஆ.11 க்கு 1 ஆம் பிரதிவாதி ஒருபதில்அறிவிப்பு அனுப்பினார் என்றால் சரிதான். ஆனால் எனக்கு அனுப்பவில்லை அழகருக்குத்தான் அனுப்பினார். அந்த பதில்அறிவிப்பை அனுப்பியதும், அதிலுள்ள விசயங்களும் அப்போதே எனக்குத் தெரியும். வா.சா.ஆ.13 மனுவில் சட்டஅறிவிப்புகள் பரிமாற்றத்தைப் பற்றி சொல்லியுள்ளோம் என்றால் சரிதான். மேற்படி பதில்அறிவிப்பில் பாகம் கொடுக்கத் தேவையில்லை என்று 1 ஆம் பிரதிவாதி சொல்லிவிட்டார் என்றால் எனக்குத் தெரியவில்லை. பதில்அறிவிப்பில் பாகம் கொடுக்கமுடியாது என்று 1 ஆம் பிரதிவாதி மறுத்துவிட்டதால் தான் அதை இந்த நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. பதில்அறிவிப்பை பற்றி வழக்குரையில் ஏன் சொல்லவில்லை என்றால் அதற்கான ஆவணம் என்னிடமில்லை என்பதால் சொல்லவில்லை. அப்போதே என் கைவசம் இருந்ததால்தான் வா.சா.ஆ.13 ல் பதில்அறிவிப்பைப் பற்றியும் நான் சொல்லியுள்ளேன் என்றால் எனக்கு சரியாக ஞாபகமில்லை. பதில்அறிவிப்பை தாக்கல் செய்தால் இந்த வழக்கு காலவரைச்சட்டத்தால் பாதிக்கப்பட்டுள்ளது என்பது தெரிந்து விடும் என்பதால்தான் அதை தாக்கல் செய்யவில்லை என்றால் தவறு. 24.08.1962 ல் புலஎண்.244/2 ல் கட்டுப்பட்ட 2.36 ஏக்கரில் கிழபுறப்பகுதியான 1.18 ஏக்கர் மட்டும்தான் ஒத்திவைக்கப்பட்டது என்றால் சரிதான். அந்த ஒத்திப்பத்திரத்தில் சுந்தர்ராஜூக்கு மேறகுப்புறபகுதியும் என் தகப்பனாரான கோவிந்தராஜூக்கு ஒதுக்கப்பட்டுள்ளதாக கண்டுள்ளது என்றால் நான் அதை படித்துப் பார்க்கவில்லை. அதே பத்திரத்தில் பதிவாளர் முன்பாக 1 வது நபரான சுந்தர்ராஜ் ரூ.400 ஐ பெற்றுக் கொண்டதாக வாசகம் உள்ளது என்றால் சரிதான். ஒத்தியை மீட்டுக் கொண்டதாக அந்தபத்திரத்திலேயே மேற்குறிப்பு செய்யப்பட்டதா என்றால் சரியல்ல. ஒத்திதாரருக்கே சொத்தையும் மூன்றுபேரும் சேர்ந்து விற்றுவிட்டார்கள். மேற்படி பத்திரத்திலேயே சுந்தர்ராஜூக்கு ஆதரவு தஸ்தாவேஜூகள் அனைத்தும் ஒப்படைக்கப்பட்டதாக கண்டுள்ளது என்றால் எனக்குத் தெரியாது. 10.10.1962 தேதியிட்ட ஒத்திப்பத்திரம் கிழபுறமுள்ள 1.18

ஏக்கர் குறித்து எழுதப்பட்டது என்றால் சரிதான். அந்த பத்திரத்தில் இரண்டாவது நபராக குறிப்பிடப்பட்ட என் தகப்பனார் மொத்தத்தில் ரூ.2,000 பெற்றுக் கொண்டதாக குறிப்பு உள்ளது என்றால் சரிதான்.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு அதை தட்டெழுத்தாளருக்கு என்னால் சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியால் வாசித்துப் பார்க்கப்பட்டு/ சாட்சிக்கு வாசித்துக்காண்பித்து அதை சரியென்று ஒப்புக்கொண்டு சாட்சி கையெழுத்திட்டார்/ கையொப்பமிட்டார்.

முதலாவது கூடுதல்
மாவட்ட நீதிபதி,
மதுரை.